உ

# ஔவையார் அருளிய
# அறநெறிமணிகள் - க-1

1. க ஆத்திசூடி
2. உ கொன்றைவேந்தன்
3. ௩ வாக்குண்டாம்

க௩ 13

இலவச வெளியீடு -

(கீழ்ப் பிரிவு மாணவர்களுக்கானது)

விநாயகர் தரும நிதியம்
புலோலி மேற்கு. பருத்தித்துறை

அபிராம் அச்சகம் — அல்வாய்

உ

# விநாயகர் தரும நிதியம்

புலோலி மேற்கு, பருத்தித்துறை.

"அரியது கேட்கின் வரிவடிவேலோய்
அரிது அரிது மானிடராதலரிது
மானிடராயினும் கூன்குருடு செவிடு
பேடுநீங்கிப் பிறந்த லரிது
பேடுநீங்கிப் பிறந்த காலையும்
ஞானமும் கல்வியும் நயத்தலரிது
ஞானமும் கல்வியும் நயந்த காலையும்
தானமும் தவமும் தான் செயலரிது
தானமும் தவமுந்தான் செய்வ ராயின்
வானவர் நாடு வழி திறந்திடுமே"

இல்லாள் அகத்திருக்க இல்லாதது ஒன்றில்லை
இல்லாளும் இல்லாளே ஆமாயின் - இல்லாள்
வலிகிடந்த மாற்றம் உரைக்குமேல் அவ்வில்
புலிகடந்த தாறுய் விடும்

"கைமாறு உகவாமல் கற்றறிந்தோர் மெய்வருந்தி
தம்மால் இயலுதவி தாம்செய்வார் — அம்மா
முளைக்கும் எயிறு முதிர்சுவை நாவிற்கு
விளைக்கும் வலியதாம் என்று."

உடன்பிறந்தார் சுற்றத்தார் என்றிருக்க
வேண்டாம்
உடன் பிறந்தே கொல்லும் வியாதி - உடன்பிறவா
மாமலையில் உள்ள மருந்தே பிணிதீர்க்கும்
அம்மருந்து போல்வாரும் உண்டு.

— ஔவையார்

ஒருவன் கள் குடித்தாலும் கொலை புரிந்தாலும். களவு, செய்தாலும் நற்றவம் செய்து உய்வு பெறலாம். ஆனால் நன்றி கொன்ற பாவத்துக்கு மட்டும் உய்வு கிடையாது.

— கந்தபுராணம்

*

உழையாமல் உண்பவன் திருடன். வேலை எதுவுமின்றி உண்டு கொண்டிருப்பவன் திருடன். சோம்பேறியாகி உணவு முத்திரையால் உண்பவன் திருடன், ஏழைகள் நாம் பொருள்தேட வழியில்லை என சோம்பியிருந்து. உழைத்துப் பொருள் தேடுபவனிடமிருந்து தட்டிப் பறிப்பவன் திருடன். உற்பத்தியில் நாட்டமின்றி உழைப்பவனிடமிருந்து பறித்துப் பங்கிடுவதில் மாத்திரம் முயலுபவன் திருடன். உழைத்தே உண்ண வேண்டும் என்ற தத்துவம் ஆழமாக வேரூன்றி விட்டால் வறுமைக்கும் இடமில்லை, வளத்துக்கும் குறை

*

சமத்துவ மனப்பான்மை, சிக்கன வாழ்க்கை, உடலுழைப்பில் ஆர்வம் இவற்றை அனுசரிப்பதன் மூலம் தெய்வீகப் பண்பு நிலையை அடையலாம்.

*

தங்களை இரு கரம்கூப்பி வேண்டுகிறோம்

இந்நூல் தங்கள் கையில் கிடைத்ததும் குறைந்தது மூன்று முறை வாசியுங்கள். உங்களுக்கு இதில் புலன் செல்ல வாய்ப்பு இல்லாது போகில் கூடிய விரைவில் உங்கள் சிநேகிதரிடம் இந்நூலை கையளியுங்கள். இன்னும் வாசிக்க வேண்டிய மன எண்ணம் ஏற்படின் ஒன்பது முறை வாசித்த பின் அடுத்தவரிடம் ஒப்படையுங்கள். தங்கள் உதவிக்கு நன்றி.

இவ் இலவச வெளியீட்டை பொதுமக்கள் பயன்பெறும் வண்ணம் சனசமூகநிலையங்கள் ஊடாக ஒவ்வொரு கிராமத்திலுமுள்ள சனசமூக நிலையங்களுக்கும் விநியோகிக்க ஆவலாய் உள்ளோம். ஆகவே நிலையங்களின் விலாசங்களை எமக்கு தெரியப்படுத்தினால் நாம் இப்பிரதிகளை அனுப்ப இலகுவாய் இருக்கும். இப்பிரதி தேவைப்படும் கல்லூரிகளும் எம்முடன் தொடர்பு கொள்ளலாம்.

புலோலி மேற்கு
22-06-1991

நிறுவனர்
விநாயகர் தரும நிதியம்

# சமர்ப்பணம்

இம் மாநிலம் உருவாகி அதில் உயிரினங்கள் உருவாக தனது சக்தியை எந்நேரமும் உதவிக் கொண்டிருக்கும் உண்மைப் பொருளான சூரிய பகவானுக்கும் (சிவம் அல்லது மெய்ப்பொருள் அல்லது இறைவன்) பூமியை மட்டும் வலம் வந்து குளிர் சக்தியை நல்கிக் கொண்டிருக்கும் சக்திப் பொருளான சந்திர பகவானுக்கும், இவைகட்கு உறு துணையாக சதா காலமும் சூரிய பகவானை வலம் வரும் அகப்பொருளான அறிவு, நியாயம், நீதி ஞானம ஆகிய சக்திகளை ஈந்து கொண்டிருக்கும் குரு, புதன், சனி, செவ்வாய் ஆகிய கிரக பகவான்களுக்கும், புறப் பொருளான கல்வி, ஆசை, தொழில் முதலிய சக்திகளைத் தரும் ராகு. வெள்ளி, கேது பகவான்களுக்கும்:

நாம் உருவாவதற்குரிய அணுவளவான விந்தை ஈந்து எம்மை இந்நிலைக்கு ஆளாக்கிய முதாதையர் வழி தந்தைக்கும்:

அவ்விந்தை கருப்பையில் கட்டி வளர்த்து எமது உடல் உருவாக தமது உடலுழைப்பை நல்கிய அம்மைக்கும்;

தெய்வீகத் தமிழ்மொழியை உருவாக்கி உலகுக்கு அளித்த ஞான மேதாவிகட்கும் அம்மொழி எண்களை தத்துவ சிந்தனையுடன் உருவாக்கி உருவம் அமைத்த முதுபெரும் ஞானமேதாவிகட்கும்,

எமக்கு இவ்வித அகப்பொருள் புறப்பொருள் வளர உதவி செய்து குருவாய் அமைந்த பெரியோர்கட்கும்,

எமது உள்ளம் சரீரம் வளரத் தேவையான உணவுச்சக்தியை அளித்துக் கொண்டிருக்கும் ஓரறிவுள்ள மரம் முதற்கொண்டு ஆறறிவுள்ள மனிதகுலம் வரையான சகல சீவராசிகட்கும்,

எமது உள்ளத்திலுள்ள அறிவுப் பொருளது வணக்கத்தைச் செலுத்தி இவர்கள் பாதாரகமலங்கட்கு இந்நூலைச் சமர்ப்பணம் செய்வதில் பூரண ஆத்ம திருப்தி அடைகிறோம்.

நன்றி.

புலோலி மேற்கு.
2-06-1991

நிறுவனர்
விநாயகர் தரும நிதியம்

# முகவுரை

மனிதராய்ப் பிறந்த ஒவ்வொருவரும் வையத்துள் வாழ் வாங்குவாழ அறநெறியே உறுதுணையாகவும் ஊன்றுகோலாகவும் அமைகின்றது. இவ் அறநெறியினின்றும் ஒருவர் விலகும்பொழுது அவருக்கும் விலங்குக்கும் எவ்வித வேறுபாடும் இல்லாது போய் விடுகிறது. அறவாழ்வு இம்மைக்கு மாத்திரமன்றி மறுமைக்கும் வழிகாட்டியாய் அமைவதால் அதனை மறப்பது கேடுவிளையும் செயலாகும் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

இவ்வுண்மையை நம் முன்னோர் நன்கு உணர்ந்திருந்தனர். அதனால் பிறந்து மொழி பயிலத் தொடங்கிய காலத்திலிருந்து கூனிக்குறுகிக் கோலூன்றித் தளர்நடையிடும் காலம்வரை ஒவ் வொருவரும் கடைப்பிடித்து ஒழுகவேண்டிய நெறிகளை வகுத்துச் சென்றுள்ளனர். அவை எமது சமுதாயத்தை பல நூற்றாண்டு களாய் நேர்வழியில் நடத்தி வந்துள்ளன.

இன்றுவரை தமிழினம் முற்றாய் அழிந்து போகாது தனது தனித்தன்மையைப் பேணி உலக அரங்கிலே மதிப்புடன் வாழ்ந்து வருவதற்கு தமிழ்ச்சான்றோர் வகுத்தஒழுக்கநெறியே அடிப்படைக் காரணமாகும். தெளிவாகவும் ஆழமாகவும் உறுதியாகவும் அவை கூறப்பட்டிருப்பது தனிப்பெருஞ் சிறப்பாகும்.

இவற்றை அவசரயுகமாகிய 20-ம் நூற்றாண்டில் மனனம் செய்யும் வழக்கம் அருகிவருவதால் எமது முன்னோரின் அற நெறிப் பாச் செல்வங்களை இத்தலைமுறையினர் சிறிது சிறிதாய் இழந்து வருகின்றனர். இந்நிலை மிகவும் பரிதாபத்திற்குரியது.

இவ் அறநெறிச் செல்வங்களை இழப்பது போன்ற பேரிழப்பு வேறு இல்லை எனத் துணிந்து கூறலாம்.

இத் தமிழ்மொழியிலுள்ள அறநெறிகளை நாம் மறந்துவிட் டோமானால் "நாம் தமிழர்" என்றுகூறி வாதம் செய்வதில் எதுவித பயனும் இல்லை. எனவே இவ் அறநெறிப் பாடல்களை

எமது குழந்தைகள் இடையே மனனம் செய்விக்கும் பழக்கத்தை மீண்டும் கொண்டுவருதல் எமது கடமையாகின்றன. பலநூற்றாண்டுகளின் முன்னர் வாழ்ந்துவந்த தமிழ் மூதறிஞர்கள், நாயன்மார்கள், சமயகுரவர்கள், முனிவர்கள் ஆகியோர் சுய நலன் கருதாது உண்மை தவறாது கடும் உடல் உழைப்புடன் சிக்கன வாழ்க்கை வாழ்ந்து யாராவது ஒரு அன்னைக்கு உணவிட்டபின்பே மிகுதியையே தங்கள் உணவாகக் கொண்டுள்ளதை புராணங்கள் மூலம் நாங்கள் படித்திருக்கின்றோம். இக்காரணங்களால் அவர்கள் தாம் நினைத்த அறநெறிப் பணிகளை (சர்ப்பந் தீண்டிய குழந்தையை உயிர்ப்பித்தல், எலும்பைப் பெண்ணாக்குதல், சொன்ன சொல் தவறாது சத்தியம் காத்தமை) அறநெறிப் பாக்களின் மூலம் செயலாக்க முடிந்தது ஆகவே இவ் அறநெறியை முற்றிலும் கடைப்பிடிப்போர் தாம் நினைக்கும் நற் செயல்களை உடனடியாக அடைந்தே தீருவர் என்பதில் சிறிதும் சந்தேகம் இல்லை. அற்புதம் என்று நாங்கள் நினைப்பது மிகமிகத் தவறாகும்.

ஆகவே இந்நூலை நீங்கள் படிப்பதோடு உங்கள் இளம்பரம்பரையினரும் கற்று மனனஞ் செய்து அவற்றை வாழ்விலே செறியச் செய்ய அவர்களை ஊக்குவிப்பது நமது கடமையும் ஆன்ம ஈடேற்றமும் அறப்பணியும் ஆகும்.

புலோலி மேற்கு,
17-10-90.

நிறுவனர்,
விநாயகர் தரும நிதியம்

# அறநெறிக் கல்வி வளர
# ஊக்குவிப்புப் பரிசு

✱

இவ் அறநெறிப் பாடங்களை சிறுவர் சிறுமியர்கள் தங்கள் பிற்கால வாழ்க்கைப் பண்புகளாகக் கடைப் பிடிப்பதற்கு இப்பிரதேசத்திலுள்ள சகல பாடசாலைகளி லும் இப்பாடங்களைக் கற்பிப்பதற்குரிய முன்முயற்சிகள் செய்துவருகின்றோம்.

எமது 15-ம் வெளியீட்டில் அறநெறி அறிவுரைகள் என்ற தலைப்பின் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு ஒவ்வொரு பாடசாலை யினதும் அதிபர், ஆசிரியர்கள்மூலம் இவ்வறநெறிப் பாடங் களை மாணவ மாணவியர்களுக்குப் பயிற்றுவித்து தேர்வு நடாத்தி அறநெறிகளை வளர்க்கவிரும்புகின்றோம். அறநெறி வளர்ச்சிச் சேவைபற்றி சில பாடசாலை அதிபர்கள், நிறுவ னங்கள் எமக்கு ஊக்கமளித்துள்ளன. இப்பாடங்களைக் கற் பிக்கும்யாழ் மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு பாடசாலைக்கும் 5-ம், 6-ம், 7-ம் ஆண்டு மூன்று பிரிவுகளுக்குமான பரிசாக மாணவர் தொகைக்கேற்ப ~~(ரூ. 1200/-) ஆயிரத்து இருநூறு வரையில்~~ வழங்க எண்ணியுள்ளோம். எனவே இவ் அற நெறிக் கல்வியைக் கற்பிக்க விரும்பும் பாடசாலைகள் எம்மோடு தொடர்பு கொள்ளும்படி பணிவன்போடு வேண்டுகிறோம்.

நன்றி

புலோலி மேற்கு,
26-9-1991.

நிறுவனர்
விநாயகர் தருமநிதியம்.

---

✱ சிறுவயதில் பயின்ற தமிழ் மொழியின் செய்நன்றியை மறவோம்.

✱ ஞானம் வளர்த்த தமிழ்மொழி வளர உள்ளத்தை நெறிப்படுத்துவோம்.

✱ எம்மை ஆளாக்கிய தமிழ் மொழியின் அறநெறியை எம் ஆன்மா ஒளியில் சேரும்வரை நினைந்து நினைந்து கண்ணீர் உருகுவோம்.

# அறநெறிப் பண்பாடு

தனி மனிதன் ஒருவன் தனது நிலையில் நின்று அன்பு வழியில் நீதி (உண்மை) தவருது தனக்குரிய கடமையைச் செய்துவந்தால் அவன் அறநெறி (தருமம்) வழியில் வாழ்ந்தவன் ஆகிருன். அவனுல் அறநெறி வளர்ச்சி அடைகிறது. இவ்வாறு ஒவ்வொரு மனிதனும் ஒழுகினல் அவனது சமுதாயத்தில் அறநெறி வளருகின்றன. இவ்வாறு ஒவ்வொரு சமுதாயமும் அறநெறியில் நடக்கும்போது அந்த நாட்டில் அறநெறிப் பண்புகள் ஓங்குகின்றன. இவ்வாறு சகல மக்களிலும் அறநெறிப் பண்பாடு வளரும்போது அந்நாட்டிலுள்ள சகல பிரச்சினைகளும் நீங்குகின்றன. இந்நெறி மேலோங்கிய நாட்டில் துயரமற்ற நல்லாட்சி மிளிர்கிறது. வேத உபநிடதங்களும் திருமூலர் திருமந்திரமும், ஆத்திசூடி, கொன்றைவேந்தன், கீதை, வாக்குண்டாம், நல்வழி, வெற்றிவேற்கை, திருக்குறள், நன்னெறி, உலக நீதி, முதலிய நீதி நூல்களும் வெவ்வேறு வகையில் இவ்வறநெறியையே உபதேசிக்கின்றன.

---

கடமையைச் சரிவரச் செய்து சுகம் பெறலாமேயன்றி, பொன்னுலும், பொருளாலும் பெண்ணுலும் பிள்ளையாலும் சுகவாழ்வை அடைய முடியாது. உண்மைப் பொருளால் வரும் சுகம் ஆனந்தமானது.

இன்று உலகம் புனிதத் தன்மையில் குறைந்து வருவதைக் காண்கிறேம். இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம் அறநெறிப் பண்பாடு குறைந்து மனம் அசுத்தமானதுதான். எமது உண்மை அல்லாத பேச்சுக்களின் ஒலி அலைகள் காற்றையும், காற்று நெருப்பையும், நெருப்பு நீரையும், நீர் பூமியையும், பூமி எமது உணவுகளையும், உணவுகள் எமது மன நிலையையும் மாற்றமடையச் செய்து வீண் பிரச்சினைகளை உண்டாக்குகின்றன.

நோய் மாற்றும் மருந்துகள் புதுப்புது நோய்களாக மாற்றப்படுகின்றன. வைத்தியசாலைகள் புது நோய்களைத் தரும் வைத்தியசாலைகளாக மாறியுள்ளன.

ஆக இவ்வுலகு புனிதமாக வேண்டுமாகுல், எல்லா மக்களும் இன்பமடைய வேண்டுமாகுல் *அறநெறி-உண்மை* ஒளி மக்கள் உள்ளத்தில் ஊற்றெடுக்க வேண்டும்.

## விநாயகர் தரும நிதியம் 1991 ல் நடாத்திய 5 ம் ஆண்டிற்கான "அறநெறி மணிகள்" வினைத்திறன் போட்டிப் பரீட்சையில்

# பரிசில்கள் பெற்ற பாடசாலைகள்

| | |
|---|---|
| அறநெறி மணிகள் பிரதிகள் இலவசமாக கொடுத்த பாடசாலைகள் | 25 |
| விண்ணப்பம் அனுப்பிய பாடசாலைகள் | 16 |
| பரீட்சை நடாத்த அனுமதிக்கப் பெற்ற பாடசாலைகள் | 11 |
| பரீட்சைகள் நடாத்திய பாடசாலைகள் | 10 |
| விசேட பரிசில்கள் பெறும் பாடசாலைகள் | 03 |
| வறுமை மாணவர்கள் நன்கொடை பெறும் பாடசாலை | 01 |
| மணற்காடு றோ. க. பாடசாலை முதல் ஆறு மாணவர்கள் பரிசு | 1750 00 |
| பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாசாலை முதல் 10 மாணவர்கள் பரிசு | 1750 00 |
| தம்பசிட்டி மெ. மி த. க பாடசாலை முதல் 9 மாணவர்கள் | 1750 00 |
| ஷை பாடசாலை 7 வறுமைமிக்க மாணவர்கள் பரிசாக | 3150 00 |
| புலோலி கிழக்கு அ. த. க. பாடசாலை முதல் 3 மாணவர்கள் | 1750 00 |
| தீக்கம் சித்திவிநாயகர் வித்தியாலயம் முதல் ஏழு மாணவர்கள் | 1750 00 |
| ஷை குரு வணக்கம் செலுத்திய ஒரு மாணவர் | 300 00 |
| தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயம் முதல் 9 மாணவர்கள் | 1750 00 |
| தட்டாதெரு மெ. மி. த. க. பாடசாலை முதல் ஏழு மாணவர்கள் | 1750 00 |
| ஷை. சிறந்த பாடசாலை அதிபர் பரிசாக | 300 00 |
| நெல்லியடி மெ, மி. த. க பாடசாலை முதல் 9 மாணவர்கள் | 1750 00 |
| மேலிப்புலோலி சை, பி. வித். முதல் ஏழு மாணவர்கள் | 1750 00 |
| ஷை குரு வணக்கம் செலுத்திய ஒரு மாணவர் | 300 00 |
| கலட்டி றோ. க. த பாடசாலை முதல் ஏழு மாணவர்கள் | 1750 00 |

கூடிய பத்துப் பாடசாலைகள் 21550 /- பெற்றுள்ளனர்.

---

தங்களை இருகரம் கூப்பி வேண்டுகிறோம்!

இந்நூல் தங்கள் கையில் கிடைத்ததும் குறைந்தது மூன்று முறை வாசியுங்கள். உங்களுக்கு இதில் புலன் செல்ல வாய்ப்பு இல்லாது போகில் கூடிய விரைவில் உங்கள் சிநேகிதரிடம் இந்நூலை கையளியுங்கள். இன்னும் வாசிக்க வேண்டிய மன எண்ணம் ஏற்படின் ஒன்பது முறை வாசித்த பின் அடுத்தவரிடம் ஒப்படையுங்கள். தங்கள் உதவிக்கு நன்றி

புலோலி மேற்கு,
10-11-1991

நிறுவனர்
விநாயகர் தரும நிதியம்

# விநாயகர் தரும நிதியம் நடாத்தும்
# அறநெறி விஞ்ஞான மன்றத்தின்
# அறநெறித் தேர்வுக்கான
# மாதிரி விண்ணப்பப் படிவம்

பாடசாலையின் பெயர் ..............................................................

பாடசாலை முகவரி ..............................................................

..............................................................

மாவட்டம் ..............................................................

கல்விக் கோட்டம் ..............................................................

பங்கு பற்றும் கல்வி ஆண்டுகள் ..............................................................

5ம் ஆண்டு மாணவர் தொகை ..............................................................

6ம் ஆண்டு மாணவர் தொகை ..............................................................

7ம் ஆண்டு மாணவர் தொகை ..............................................................

மேற் கூறியவை யாவும் உண்மையானவையும் சரியானவையும் என உறுதி கூறுகின்றோம்.

.............................. ..............................

செயலாளர் — பாடசாலை அதிபர் / தலைவர்

அபிவிருத்திச் சங்கம் .................. அபிவிருத்திச் சங்கம்

திகதி

# விநாயகர் தரும நிதியம் நடாத்தும்
# அறநெறி விஞ்ஞான மன்றத்தின்
# அறநெறித் தேர்வுக்கான விதிமுறைகள்

இத் தேர்வுகள் 5ம், 6ம், 7ம் ஆண்டு மாணவர்களுக்கு பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களுக்கூடாகவே நடை பெறும்.

1. குருவுக்கு வணக்கம் ''ஊ—'' செலுத்தத் தவறிய கடிதங்கள் ஏற்கப் பெறமாட்டாது. எச்சமயத்தவரா யிருப்பினும் தங்கள் தங்கள் சமயத்திற்கு ஏற்றவாறான குரு வணக்கத்தைக் காட்டலாம்.
2. மாணவர்களது எதிர்கால வாழ்க்கை வளம் பெறும் விதத்தில் இவ் அறநெறியைப் போதிக்கும் ஆசிரியர்கள் சிக்கன வாழ்க்கை வாழ்ந்து முன்னுதாரணமாகத் திகழவேண்டும் என எதிர்பார்க்கின்றோம். (உதாரண மாக எழுதும் தாள்களை வீணாக்காது சிக்கனப் பழக்கத்தைப் பழக்குதல்)
3. இத்தேர்வுகளில் சேர விரும்பும் பாடசாலை அபிவிருத் திச்சங்கம் மது அருந்தும் பழக்கமுள்ள ஆசிரியர்கள் கடமை நேரங்களில் மது அருந்திவிட்டு கடமையாற் றுவதில்லை என உறுதி கூறவேண்டும்.
4. செவ்வாய், வியாழக்கிழமைகளில் வசதிக்கேற்ப 25 நிமிடங்கள் வரையில் இவ் அறநெறிப் பாடங்களைக் கற்பித்தல் நலமென உறுதியுடன் நம்புகின்றோம்.
5. இத்தேர்வுகளில் சேர விரும்பும் பாடசாலைகள் எவை யும் பங்குபற்றலாம்.
6. 1992 தை மாதமளவில் இக்கல்விப் போதனைக்குரிய அறநெறிப் பிரதிகள் விண்ணப்பத்தின் பேரில் இலவ சமாக அனுப்பி வைத்து 1992 ஆனி மாதமளவில் இத் தேர்வுகள் நடைபெறும்.
7. வினாத்தாள்கள் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திற்கு உரிய நேரத்தில் எம்மால் அனுப்பி வைக்கப்பெறும். நாம் குறிப்பிடும் தினத்தன்று தேர்வுகள் நடாத்தப் பெறல் வேண்டும்.

(ஒவ்வொரு பாடசாலைக்கும் ^பிரிவுக்கேற்ப^ ஒவ்வொரு வினாத்தாள் அனுப்பி வைக்கப் பெறும். பரீட்சைத் தினத்தன்று ஆசிரியர் வினாக்களை கரும்பலகையில் எழுதியோ, சொல்வதெழுதல் மூலமாகவோ மாணவருக்கு கொடுக்க வேண்டும்.)

8. ஒவ்வொரு பாடசாலைகளும் தேர்வில் பங்கு பற்றிய முதல் மூன்று மாணவர்களின் புள்ளியிடப் பெற்ற விடைத்தாள்களையும் தேர்வில் பங்கு பற்றிய சகல மாணவரின் புள்ளி விபரங்களையும் எமக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

9 மாணவருக்குச் சேரவேண்டிய பரிசில்கள் 1992 நவராத்திரி தினமளவில் அனுப்பி வைக்கப்பெறும். பரிசில்களைப் பணமாக நேரில் பெற விரும்பும் பாடசாலைகள் அத்தாட்சியுடன் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம். பரிசு பெறும் மாணவரின் விபரங்கள் அவ்வப்பாடசாலைகளுக்கு எம்மால் முன் கூட்டியே அனுப்பிவைக்கப் பெறும்.

அறநெறிக் கல்விக்குரிய 5ம், 6ம், 7ம் ஆண்டு மாணவர்க்கான பரிசில்கள் பின்வருமாறு :-

5200 ரூபா பெருமதியான 3 தங்கப் பதக்கங்களும்
1000 ரூபா பெருமதியான 120 முதலாம் பரிசுகளும்
500 ரூபா பெருமதியான 300 இரண்டாம் பரிசுகளும்
250 ரூபா பெருமதியான 480 மூன்றாம் பரிசுகளும்
2700 வரையான தகைமைச் சான்றிதழ்களும்
வழங்கப்பெறும்.

எமது விதிகளுக்கமைய செயற்பெறும் அறநெறிச் சிந்தனை அதிபர்கள் அறநெறி விஞ்ஞான மன்றத்தின் கௌரவ உறுப்பினர்களாவர்.

நிறுவனர்
25-10-91 விநாயகர் தரும நிதியம்

---

## பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 8 | 4 | அனுபத்தாலும் | அனுபவத்தாலும் |
| 9 | 4 | சொல்வ | சொல்ல |
| 9 | 15 | மேட்சத்தை | மோட்சத்தை |
| 9 | 27 | போழுதில் | பொழுதில் |
| 10 | 23 | நேரினிலும் | நேரினும் |
| 11 | 5 | பேசதல் | பேசுதல் |
| 13 | 18 | பன்பு | பண்பு |
| 13 | 24 | செல்பவனுக்கு | செய்பவனுக்கு |
| 15 | 1 | சொற்கூற்ற | சொற்கூற்றம் |

# வேண்டுகோள்

இந்த அறநெறி மணிகள் வெளியீடுகளை சகல பாடசாலைகளிலும் 5-ம் 6-ம் 7-ம் ஆண்டு மாணவர்கட்கு கற்பிப்பதற்காக ஒவ்வோர் பாடசாலைக்கும் 4 பிரதிகள் வீதம் இலவசமாய் அனுப்ப எண்ணியுள்ளோம். இந்நெறியை கற்பிக்க விரும்பும் பாடசாலைகள் எம்முடன் தொடர்பு கொண்டால் பிரதிகளை அனுப்பி வைப்போம். ஆண்டு முடிவில் பாடசாலை அதிபர்கள் இதைப் பரீட்சித்து திறமையான முதல் மூன்று மாணவர்களின் விடைத்தாளையும் கொடுத்த கேள்வித்தாளையும் எமக்கு அனுப்பியதும் அவர்களுக்குரிய பரிசில்களையும் தகைமைச் சான்றிதழ்களையும் ஒவ்வொரு பாடசாலைக்குரிய பரிசில்களையும் அனுப்பி வைக்க எண்ணியுள்ளோம்.

| | | |
|---|---|---|
| முதலாம் பரிசாக | — | 5200/- |
| 2-ம் பரிசாக 3பரிசுகள் | — | 2500/- |
| 3-ம் பரிசாக 3பரிசுகள் | — | 1000/- |
| 4-ம் பரிசாக 3பரிசுகள் | — | 500/- |

சென்ற 1991 தை மாதம் அறநெறிமணிகள் பிரதிகளில் 1200 பிரதிகளை நேரில் கொண்டுபோய் எமது சுற்றுடலிலுள்ள 25 பாடசாலைகளுக்கு விநியோகித்து விண்ணப்பத்தை அனுப்பும்படி கேட்டிருந்தோம். 16 பாடசாலைகள் மட்டும் விண்ணப்பத்தை அனுப்பியிருந்தன. அவற்றில் 5பாடசாலைகள் ஆங்கிலக் கையெழுத்திட்டு அனுப்பியதால் அவற்றை நிராகரித்து மற்றைய 11பாடசாலைகளிலும் அந்தந்த பாடசாலை அதிபர்களே பரீட்சித்து முதல் மூன்று மாணவர்களின் பெயர்களையும் கேள்வித்தாளையும் அனுப்புமாறு கடிதம் எழுதியுள்ளோம். சரஸ்வதிப்பூசை தினத்தன்று ஒவ்வொரு பாடசாலைகளுக்கும் 1000/- 500/- 250/- வீதம் பரிசு கொடுக்க ஒழுங்குகள் செய்து வருகிறோம். அறநெறி வளர ஆசிரியர்களை செயல்படுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

புலோலி மேற்கு.

நிறுவனர்,

விநாயகர் தரும நிதியம்

## பரிசுகள் பெறவிருக்கும் 11 பாடசாலைகள்

மணற்காடு றோ. க. த. க. பாடசாலை
அல்வாய் வடக்கு அ. த. க. பாடசாலை
பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாசாலை
தம்பசிட்டி மெ. மி. த. க. பாடசாலை
தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்
தட்டாதெரு மெ. மி த. க. பாடசாலை
திக்கம் சித்திவிநாயகர் வித்தியாலயம
மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாசாலை
நெல்லியடி மெ. மி. த. க. பாடசாலை
கலட்டி றோ. க. த. பாடசாலை
புலோலி கிழக்கு அ த. க. பாடசாலை

புலோலி மேற்கு,
2-6-1991.

நிறுவனர்
விநாயகா தரும நிதியம்

---

| வடசொல் | | தமிழ்ச்சொல் |
|---|---|---|
| அங்கத்தினர் | — | உறுப்பினர் |
| அபிப்பிராயம் | — | கருத்து |
| அபாயம் | — | இடர் |
| ஆச்சரியம் | — | வியப்பு |
| ஆரோக்கியம் | — | உடல் நலம் |
| உக்கிரமான | — | கடுமையான |
| உதாரணம் | — | எடுத்துக்காட்டு |
| உபசாரம் | — | முகமன் கூறல் |
| உத்தரவாதம் | — | பொறுப்பு |

# ஔவையார் ஈந்த ஆத்திசூடி

1. அறம் செய்ய விரும்பு
தருமத்தைச் செய்வதற்கு ஆவலோடு இருப்பாயாக.

2. ஆறுவது சினம்
கோபத்தைத் தணிப்பதுதான் எமது முதற் கடமை.

3. இயல்வது கரவேல்
உன்னால் முடிந்ததை ஒளிப்பின்றிச் செய்.

4. ஈவது விலக்கேல்
தருமம் கொடுக்க விரும்புவதைத் தடுக்காதே.

5. உடையது விளம்பேல்
உன்னிடம் உள்ள செல்வங்களைப் பற்றி சொல்லித் திரியாதே.

6. ஊக்கமது கைவிடேல்
உனக்குப் பொருந்திய முயற்சியை வழுவவிடாதே.

7. எண்ணெழுத்து இகழேல்
கணித முறைகளையும் சொல் வசனங்களின் இயல்புகளையும் அறிவது அவசியம் இல்லை என இகழாதே.

8. ஏற்பது இகழ்ச்சி
உன்னால் முடிந்த தொழில் செய்து பெறும் வருமானத்தை விட்டு வேறுவகையில் இரத்தல் இழிவான செயல்.

9. ஐயமிட்டுண்
உனக்குள்ள பொருளில் வசதி குறைந்தவர்களுக்கு கொடுத்தபின் மிகுதியை அனுபவிப்பாயாக.

10. ஒப்புர வொழுகு
சமத்துவ நிலையை அனுசரித்து வாழ்வாயாக.

11. ஓதுவதொழியேல்
நீ எதை நன்மை பயக்கும் என விரும்புகிறாயோ அதை கிரமமாக படிப்பாயாக.

12. ஔவியம் பேசேல்
தகாத எண்ணத்தைக் கொடுக்கும் வார்த்தைகளைப் பேசாதே.

13. அஃகஞ் சுருக்கேல்
தானியத்தை விளைவிக்கும் நிலங்களை வேறு தேவை எண்ணி சுருக்காதே.

14. கண்டொன்று சொல்லேல்
கண்டதை விட்டு வேறு உரைத்தல் ஆகாது. சத்தியம் தவறுதே.

15 ஙப்போல் வளை
''ங'' எழுத்தைப்போல
வளைந்து கொடுத்து பிறரை நேசித்து வாழ்வாயாக.

16 சனி நீராடு
சனிக்கிழமைகளில் எண்ணெய் தேய்த்து முழுகுவாயாக.

17. நயம்பட உரை
பிறருக்கு உபயோகமான சொற்களைப் பேசுவாயாக.

18. இடம்பட வீடெடேல்
தகுதியை மீறி வீட்டை உண்டாக்காதே.

9 இணக்கமறிந் திணங்கு
உனக்கு பொருத்தமானவருடன் கூடி வாழ்வாயாக.

20 தந்தை தாய் பேண்
தந்தை தாயரை சகல துன்பங்களில் நின்றும் காப்பாற்றுவாயாக.

21. நன்றி மறவேல்
ஒருவர் செய்த நன்றியை எக்காலத்திலும் மறவாதே.

22. பருவத்தே பயிர் செய்
பயிருக்குரிய பக்குவ காலத்திலேயே பயிரைச் செய்வாயாக

23. மன்று பறித் துண்ணேல்
மன்னவன் சபைக்கு குறைகளை முறையிட வருபவர்களிடம் பொருள் கவர்ந்து சீவனம் செய்யாதே.

24. இயல்பலாதன செயேல்
சக்திக்கு மீறிய எக்கருமத்தையும் செய்யாதே.

25. அரவ மாட்டேல்
நச்சுத் தன்மையுள்ள பாம்புடன் விளையாடாதே.

26. இலவம் பஞ்சில் துயில்
இலவம் பஞ்சிலான மெத்தையில் படுத்துறங்கு.

27. வஞ்சகம் பேசேல்
உள்ளொன்று வைத்து புறமொன்று பேசாதே.

28. அழகலாதன செயேல்
கூடாத செயல்களில் ஈடுபடாதே.

29. இளமையிற் கல்
இளமைப் பருவத்தில் கருத்துடன் கல்வியைக் கற்பாயாக

30. அறனை மறவேல்
தரும ஒழுக்கங்களை மறவாதே.

31. அனந்த லாடேல்
தூக்கத்தை அதிகமாகக் கொள்ளாதே.

32. கடிவது மற
சினம் கொள்வதை மறப்பாயாக.

33. காப்பது விரதம்
பிற உயிர்களைக் கொல்லாமல் காப்பதே உண்மையான விரதம்

34 கிழமைப் பட வாழ்
உன்னைச் சார்ந்தவருக்கும் பிறருக்கும் கொடுத்து வாழ்வாயாக.

35. கீழ்மை அகற்று
உன் தகுதிக்கு கீழ்மையான செயல்களை அகற்றி நடப்பாயாக.

36. குணமது கைவிடேல்
நற்குணத்தைக் கைவிடாதே

37. கூடிப் பிரியேல்
நட்பு வைத்தபின் பிரியாதே.

38. கெடுப்பது ஒழி
பிறரைக் கெடுக்கும் எண்ணத்தை நீக்குவாயாக.

39. கேள்வி முயல்
அனுபவ அறிவினை முயன்று பெறுவாயாக.

40. கைவினை கரவேல்
உனக்குத் தெரிந்த கருமத்தை மறையாது பிறர்க்கு கற்பிப்பாயாக.

41. கொள்ளை விரும்பேல்
பிறர் பொருளைக் கொள்ளையடித்து வாழும் வாழ்வை விரும்பாதே.

42. கோதாட் டொழி
சூதாடல் போன்ற விளையாட்டுக்களை விலக்கு.

43. கௌவை அகற்று
பழியான கருமங்கள் செய்தலை நீக்கி வாழ்வாயாக.

44. சக்கர நெறிநில்
அரசனது ஆணையின்படி ஒழுகு.

45. சான்றோர் இனத்திரு
சான்றோரின் கூட்டத்தில் மாறாது இருப்பாயாக.

46. சித்திரம் பேசேல்
உண்மைபோல் தோன்றும் கற்பனைப் பொய்களைப் பேசாதே.

47. சீர்மை மறவேல்
சிறப்பான செயல்களை ஆற்றுவாயாக.

48. சுளிக்கச் சொல்லேல்
பிறர் வருந்தக்கூடிய கொடிய வார்த்தைகளைப் பேசாதே.

49. சூது விரும்பேல்
சூதாடுதலை விரும்பாதே.

50. செய்வன திருந்தச் செய்
செய்யும் எக்காரியத்தையும் ஒழுங்காக திருத்தமாகச் செய்வாயாக

51. சேரிடம் அறிந்து சேர்
நல்லோர்களைத் தெரிந்து அவர்களுடன் வாழ்வாயாக.

52. சையெனத் திரியேல்
பிறர் இகழும்படியாக அலைந்து திரியாதே.

53. சொற்சோர்வு படேல்
சொன்ன சொல்லை நிறைவேற்றுவதில் தளர்ச்சி காட்டாதே.

54. சோம்பித் திரியேல்
முயற்சி இன்றி சோம்பித் திரியாதே.

55. தக்கோ னெனத்திரி
சான்றோன் என பிறர் சொல்லும்படியாக நடந்துகொள்.

56. தானமது விரும்பு
தானம் வழங்குவதை விரும்புவாயாக

57. திருமாலுக் கடிமை செய்
நாராயணனுக்குத் தொண்டு செய்வாயாக.

58. தீவினை யகற்று
பாவமான காரியத்தை தவிர்த்துவிடு.

59. துன்பத்திற்கு இடம் கொடேல்
மனக் கவலைக்கு இடமளியாதே.

60. தூக்கி வினை செய்
எக்கருமத்தையும் நன்றாய் ஆராய்ந்து செயற்படுவாயாக.

61. தெய்வ மிகழேல்
உண்மைப் பொருளான தெய்வத்தை இகழ்ந்து செயல் புரியாதே.

62. தேசத்தோ டொத்து வாழ்
நீ வாழுகின்ற கிராமத்து மக்களது பழக்க வழக்கத்துடன் வாழ்வாயாக.

63. தையல் சொற் கேளேல்
அறிவீனமான பெண்களின் சொல்லுக்குச் செவிசாய்க் காதே.

64. தொன்மை மறவேல்
பழைய நன்னெறி மரபுகளை மறந்து ஒழுகாதே

65. தோற்பன தொடரேல்
தோல்வி தரக்கூடிய விடயங்களில் ஈடுபடாதே.

66. நன்மை கடைப்பிடி
எவருக்கும் நன்மை பயக்கும் விடயங்களைப் பின்பற்றி ஒழுகு

67. நாடொப்பன செய்
நாட்டு மக்கள் கடைப்பிடிக்கும் நல்ல பழக்க வழக்கங் களைப் பின்பற்றுவாயாக.

68 நிலையிற் பிரியேல்
எக்காலத்திலும் உயர்ந்த நிலையில் இருந்து நீங்கி வாழாதே.

69. நீர் விளையாடேல்
ஆழமான நீர் நிலைகளில் நீந்தி விளையாடாதே.

70. நுண்மை நுகரேல்
நோய் தரக் கூடிய சிற்றுண்டிகளை விரும்பாதே

71. நூல் பல கல்
பல துறைகளிலும் அறிவைத் தரும் பலவகையான நூல்களையும் கற்பாயாக.

72. நெறபயிர் விளை
உணவுக்கு முக்கியமான நெற்பயிரினை விளைவிப்பாயாக.

73. நேர்பட ஒழுகு
நேரிய வழியைக் கடைப்பிடித்து நடப்பாயாக.

74. நைவினை நணுகேல்
கெடுதலைத் தரும் விடயங்களை விலக்கி நடப்பாயாக.

75. நொய்ய உரையேல்
அற்பத்தனமான சொற்களைக் கூறுதே.

76 நோய்க்கு இடம் கொடேல்
உடல் நலத்தைப் பேணி நோய்க்கிடங் கொடாமல் நடந்து கொள்வாயாக.

77 பழிப்பன பகரேல்
பிறர் பழிக்கத் தக்க வார்த்தைகளைப் பேசாதே.

78 பாம்பொடு பழகேல்
பாம்பை ஒத்த தீயவருடன் பழகாதே.

79. பிழைபடச் சொல்லேல்
தவறு இழைக்கக் கூடிய சொற்களைப் பேசாதே.

80. பீடு பெற நில்
பெருமையைப் பெறத் தக்கவாறு நடந்து கொள்வாயாக

81. புகழ்ந்தாரைப் போற்றி வாழ்
வஞ்சகமின்றி புகழ்ந்து உனை நாடி வருவோரைப் போற்றுவாயாக.

82. பூமி திருத்தியுண்
சோம்பலின்றி ஊக்கத்துடன் நிலத்தைத் திருத்தி பயிரிட்டு உண்பாயாக.

83. பெரியோரைத் துணை கொள்

அனுபவம் மிக்கோரைத் துணைக் கொண்டு வாழ்வாயாக.

84. பேதைமை அகற்று

அறிவாலும் அனுபவத்தாலும் உன்னிடமுள்ள அறிவின்மையைப் போக்கிக் கொள்வாயாக.

85. பையலோ டிணங்கேல்

சிறுகுணங் கொண்டவரோடு சேர்ந்து வாழாதே.

86. பொருள்தனைப் போற்றி வாழ்

எப்பொருளாயிருந்தாலும் அப்பொருள்களைப் பேணிப் பாதுகாத்து வாழ்வாயாக.

87. போர்த் தொழில் புரியேல்

எவருடனும் சச்சரவில் ஈடுபடாதே

88. மனந் தடுமாறேல்

இடையூறு வந்த இடத்தும் மனஉறுதியுடன் கருமத்தை ஆற்றுவாயாக.

89 மாற்றானுக் கிடங்கொடேல்

பகைவனுக்கு இடமளிக்கக்கூடிய காரியத்தைச் செய்யாதே.

90. மிகைப்படச் சொல்லேல்

அளவுக்கதிகமான சொற்களைப் பேசாதே.

91. மீதூண் விரும்பேல்

அளவுக்கதிகமான உணவை விரும்பாதே.

92. முனை முகத்து நில்லேல்

போர் முனையில் முன்னுக்கு நிற்காதே.

93. மூர்க்கரோடிணங்கேல்

முரடரோடு நட்பு வையாதே.

94. மெல்லினில்லாள் தோள் சேர்

மென்மையான உன் மனைவியிடம் அன்பாய் நடப்பாயாக

95. மேன் மக்கள் சொற்கேள்
சான்றோரின் சொற்களைக் கேட்டு நடப்பாயாக.

96. மொழிவ தற மொழி
நீ சொல்வ வேண்டியதை தெளிவாக விளக்கிக் கூறுவாயாக.

97. மோகத்தை முனி
கீழான ஆசைகளை நீக்குவாயாக.

98. வல்லமை பேசேல்
உனது சொந்த வல்லமையை எடுத்துக் கூறாதே.

99 வாதுமுற் கூறேல்
குதர்க்கமான வார்த்தைகளைப் பெரியோர் முன் கூறாதே.

100 வித்தை விரும்பு
கல்வியை மனவிருப்பத்துடன் கற்பாயாக.

101 வீடு பெற நில்
மோட்சத்தை அடைவதற்குரிய ஞான வழிகளில் தளராது நிற்பாயாக.

102 உத்தமனாய் இரு
யாவருக்கும் நல்லவனாய் வாழ்வாயாக.

103 ஊருடன் கூடி வாழ்
நீ வாழும் ஊர் மக்களோடு ஒற்றுமையாக வாழ்வாயாக.

104. வெட்டெனப் பேசேல்
பிறர் புண்படும் வார்த்தைகளைப் பேசாதே.

105 வேண்டி வினை செயேல்
பிறர் கருமத்தை கருதாது தனது கருமத்தை மாத்திரம் கருதி செயல் புரியாதே.

106. வைகறைத் துயிலெழு
அதிகாலைப் பொழுதில் துயில் எழுவாயாக.

107. ஒன்னாரைத் தேறல்
உன் பகைவரை உணர்ந்து நடந்து கொள்வாயாக.

108. ஓரம் செல்லேல்
யாராயிருந்தாலும் பாரபட்சமின்றி நியாயத்தை எடுத்து உரைப்பாயாக.

ஔவையார் அருளிய

# கொன்றை வேந்தன்

*அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்*

நாம் முதன்முதலில் அறிந்து கொள்ளும் கடவுள் தாயும் தந்தையுமே.

*ஆலயம் தொழுவது சாலவும் நன்று*

கோவில் சென்று கடவுளை வணங்குதல் மிகவும் நல்லது.

*இல்லறம் அல்லது நல்லறம் அன்று*

மனைவியோடு சேர்ந்து நடாத்தும் அறவாழ்வு சிறந்ததாகும்.

*ஈயார் தேட்டை தீயார் கொள்வர்*

பிறர்க்கு ஈயாது வாழ்வோர் தேடி வைத்த செல்வத்தைத் துட்டர்கள் கவர்ந்து கொள்வர்.

*உண்டி சுருங்குதல் பெண்டிற்கு அழகு*

சிக்கன உணவு பெண்டிற்கு சிறப்பைத் தரும்.

*ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்*

ஊர்மக்களைப் பகைத்துக் கொள்ளும் வம்சம் பூண்டோடு ஒழியும்.

*எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்*

கணிதமும் எழுத்தறிவும் மாந்தர்க்கு இரு கண்கள் போன்றவை.

*ஏவா மக்கள் மூவா மருந்து*

ஏவப்படாமலே குறிப்பறிந்து செய்யும் மக்கள் மூப்பினின்று காக்கும் அமிர்தத்தை ஒப்பர்.

*ஐயம் புகினும் செய்வன செய்*

பிச்சை எடுக்க நேரினிலும் செய்யவேண்டிய நற்கருமங்களைச் செவ்வனே செய்து வா.

*ஒருவனைப் பற்றி ஓர் அகத்து இரு*

இறைவனை (உண்மைப் பொருள்) நெஞ்சிலே இருத்தி எந்நாளும் வழிபடுவாயாக.

ஓதலின் நன்றே வேதியர்க்கு ஒழுக்கம்

வேதத்தை மனனம் செய்வதிலும் பார்க்க பார்ப்பனர்க்கு ஒழுக்கமே உயர்வானது.

ஔவியம் பேசுதல் ஆக்கத்திற்கு அழிவு

பொருமைச் சொற்களைப் பேசுதல் ஒருவனின் ஆக்கத்திற்கு அழிவைத் தரும்.

அஃகமும் காசும் சிக்கனத் தேடு

தானியத்தையும் காசையும் பிற்காலத்துக்கென சேமித்து வைப்பாயாக.

கிட்டாதாயின் வெட்டென மற

நீ விரும்பிய பொருள் கிடைக்கப் பெருதாயின் அதனை உடனேயே மறந்து விடு.

கூர் அம்பு ஆயினும் வீரியம் பேசேல்

கூரிய அம்பை உடையவனுய் இருந்தாலும் தன்னைத்தானே புகழ்தல் தக்கதன்று.

சோம்பர் என்பவர் சோம்பித் திரிவர்

சோம்பலை உடையோர் வறுமையினுல் வருந்தி அலைந்து திரிவர்

தந்தை சொல் மிக்க மந்திரமில்லை

பெற்ற தகப்பனின் (புத்திமதி) சொற்களிலும் பார்க்க உயர்ந்த மந்திர உபதேசம் வேறில்லை.

தாயிற் சிறந்த ஒரு கோயிலும் இல்லை

பெற்ற தாயிலும் பார்க்க வணங்குதற்குரிய ஆலயம் வேறு இல்லை

தோழனோடும் ஏழமை பேசேல்

சிநேகிதன் இடத்திலும் உனது வறுமை நிலையினை எடுத்துப் பேசாதே.

நல்லிணக்கம் அல்லது அல்லல் படுத்தும்

நல்லவர் அல்லாதாருடன் நட்புக்கொள்ளல் பெரும் துன்பத்திற்கு வழியாகும்.

நிற்கக் கற்றல் சொல் திறம்பாமை

சொன்ன சொல் மாருது இருத்தலே கற்ற கல்வியின்படி ஒழுகுபவனுக்கு அடையாளம்.

பண்ணிய பயிரில் புண்ணியம் தெரியும்

முயற்சியின் அளவு பயிர் விளைவிலே தெரிவது போன்று ஒருவன் அனுபவிக்கும் நன்மைகளில் இருந்து அவனது புண் ணியத்தின் நன்மை தெரியும்.

பொல்லாங்கு என்பவை எல்லாம் தவிர்

தீமை என்று சொல்லப்படும் எல்லா இழிகுணங்களையும் தவிர்த்து விடுவாயாக.

போனகம் என்பது தான் உளந்து உண்டேல்

உண்மையான உணவு என்பது தானே வருந்தி உழைத்து உண்பதே ஆகும்.

முறபகல் செய்யின் பிற்பகல் விளையும்

ஒருவனுக்கு முன்னர் தீங்கு செய்தால் அதன் பயனுக வரும் துன்பங்கள் காலம் கடந்தும் உண்டாகும்.

மூத்தோர் சொன்ன வார்த்தை அமிர்தம்

அறிவாலும் வயதாலும் முதிர்ந்தோர் கூறும் அறிவுரைகள் அமிர்தம்போல் நெடிதுகாலம் வாழ்விக்கும்.

உரவோர் என்கை இரவாது இருத்தல்

மனவலிமை உடையவர் என்பது இரவாது இருக்கும் பண்பே ஆகும்.

ஊக்கம் உடமை ஆக்கத்திற்கு அழகு

செய்யும் கருமத்திலே தளராத ஊக்கம் உடமையே வளர்ச் சிக்கு அழகாகும்.

வெள்ளைக்கு இல்லை கள்ளச் சிந்தை

பரிசுத்தமான கள்ளமில்லாத சிந்தை உடையவருக்கு நினை விலே கள்ளம் புகாது.

ஓதாதார்க்கு இல்லை உணர்வோடு ஒழுக்கம்

அறிவு நூல்களைக் கல்லாதவர்க்கு நல்லுணர்வும் நல்லொழுக் கமும் இல்லையாகும்.

ஒளவையார் அருளிய

# வாக்குண்டாம்

நீர் மேல் எழுத்தும் கல்லில் எழுத்தும்

1. *நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்*
*கல்லில் எழுத்துப்போற் காணுமே — அல்லாத*
*ஈரமிலா நெஞ்சத்தார்க்கு ஈந்த உபகாரம்*
*நீர்மேல் எழுத்துக்கு நேர்.*

நல்லவர்க்குச் செய்யும் உதவியானது அவர் நெஞ்சத்திலே கல்லின் மீது எழுதிய எழுத்தாக நின்று நிலவும். கொடியவர்க்குச் செய்த உதவியானது நீரில் எழுதிய எழுத்தாக அவரால் உடன் மறக்கப்பட்டு விடும்.

அறிவு, திரு, பண்பு

2: *நீரளவே ஆகுமாம் நீராம்பல் தான்பெற்ற*
*நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு — மேலைத்*
*தவத்தளவே ஆகுமாந் தான்பெற்ற செல்வம்*
*குலத்தளவே ஆகும் குணம்.*

தண்ணீர் மட்டத்திற் கேற்ப தாமரை வளரும். ஒருவனது அறிவு அவன் கற்கின்ற நூல்களின் தன்மைக்கேற்பவே வளரும். ஒருவனது செல்வம் அவன் செய்த (வினை) தவத்தின் அளவாகவே அமையும். ஒருவனது பண்பு அவன் பிறந்த சமூகத்திற் கேற்பதாய் அமையும்.

3. *வேங்கை வரிப்புலிநோய் தீர்த்த விடகாரி*
*ஆங்குஅதனுக்கு ஆகாரம் ஆனாற்போல் - பாங்கறி*
*புல்லறி வாளர்க்குச் செய்த உபகாரம் (யாப்*
*கல்லின்மேல இட்ட கலம்.*

வேங்கைப் புலியின் நோயைத் தீர்த்த விசவயித்தியன் அவ்விடத்திலேயே இரையானது போல மூடர்க்குச் செய்கின்ற உதவியும் செல்பவனுக்கு ஆபத்தாய் கல்லின் மேல் போடப் பெற்ற மண்பாத்திரமாய் விடும்.

### அடக்கத்தை அவமதியாதீர்

4. அடக்க முடையார் அறிவிலர்என்று எண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா - மடைத்தலையில்
ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்
வாடி இருக்குமாம் கொக்கு.

அடங்கி இருப்பவரை அறிவில்லாதவர் என்று நினைத்து அவர்களை வெல்ல நினைக்க வேண்டாம். கொக்கு சிறிய மீன்களைத் தவிர்த்து பெரிய மீன்களை எதிர்நோக்கி இருப்பது போன்றதே அடங்கியிருப்பவரின் அடக்கமாகும்.

### உடன் பிறந்தே கொல்லும் வியாதி

5. உடன்பிறந்தார் சுற்றத்தார் என்றுஇருக்க வேண்டாம்
உடன் பிறந்தே கொல்லும் வியாதி - உடன்பிறவா
மாமலையில் உள்ள மருந்தே பிணிதீர்க்கும்
அம்மருந்து போல்வாரும் உண்டு.

எம்முடன் பிறந்த சுற்றத்தவர்கள் எமக்கு உதவும் சுற்றத்தவர் என்று எண்ணுதல் கூடாது. எங்கோ உள்ள மலையில் தோன்றிய மருந்துச் செடியானது பிணியைப் போக்கி உதவுவது போல் எங்கோ பிறந்த அன்னியரும் உதவுதல் உண்டு.

### வாழ்க்கைத் துணை

6. இல்லாள் அகத்திருக்க இல்லாதது ஒன்றில்லை
இல்லாளும் இல்லாளே ஆமாயின் - இல்லாள்
வலிகிடந்த மாற்றம் உரைக்குமேல் அவ்வில்
புலிகிடந்த தூறாய் விடும்

உத்தமமான மனைவி வீட்டில் இருந்தால் அங்கு இல்லாத செல்வமே வேறில்லை. கடுமையான சொற்கள் பேசும் மனைவியரை உடைய இல்லமானது புலி வாழுகின்ற புதராய் மாறி துன்பந் தருவதாகும்.

7. கல்லாத மாந்தர்க்கு கற்றுணர்ந்தார் சொற்கூற்றம்
அல்லாத மாந்தர்க்கு அறம் கூற்றம் — மெல்லிய
வாழைக்கு தான்ஈன்ற காய்கூற்றம் கூற்றமே
இல்லிற்கு இசைந்து ஒழுகாப்பெண்.

அறிவிலாத மக்கட்கு அறிஞர்களது சொல் வெறுப்பளிக்கும் இல்லாத மாந்தர்க்கு தரும நெறியான கூற்றுக்கள் வெறுப்பளிக்கும். பெரும் காற்றுக்கு தாக்குப்பிடிக்காத வாழைக்கு அவ் வாழையின் குலையே அழிவைக் கொடுக்கும் கணவனது பணிகளுக்கு இசைந்து ஒழுகாத மனைவி வாழ்க்கைக்கு கூற்றமாகும்.

## விநாயகர் நிறுவன நிதியம் வளர்ந்து சேவை பெருக வேண்டுமென வாழ்த்துவோரில் சிலர்-

கைதடி சைவச் சிறுவர் இல்லம் – ஆ. கந்தையா

யாழ்ப்பாணம் மில்க்வைற் சவர்க்கார தொழிற்சாலை
திரு க. கனகராசா

வதிரி பரமானந்தா ஆச்சிரமம் - சுவாமி பரமானந்தா

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் - திரு இ ஐயாத்துரை

சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையம்
திரு செ. இரத்தினசிங்கம்

கற்கோவளம், காரைநகர் - திரு சி. சோமநாதன்

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர்

மெதடிஸ்த உயர்தர பெண்கள் பாடசாலை

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி

சுன்னுகம் முத்தமிழ் மன்ற நூல் நிலையம் - திரு ஸ்ரீகுமரன்

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி

ஏழாலை இந்து இளைஞர் மன்றம்

உடுப்பிட்டி அறிவகம் சனசமூக நிலையம்

பொலிகண்டி விநாயகர் சனசமூக நிலையம்

இயக்கச்சி கோவில் வயல் சி சி. த க. பாடசாலை

பொலிகண்டி அம்பிகை சனசமூக நிலையம்

வல்வெட்டித்துறை றெயின் போஸ் சனசமூக நிலையம்

யாழ்ப்பாணம் மாநகர ஆணையாளர் – திரு வி. பி. பாலசிங்கம்

பருத்தித்துறை நகர ஆணையாளர்

பருத்தித்துறை காட்லிக் கல்லூரி

பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாசாலை

# விநாயகர் தரும நிதியம்

புலோலி மேற்கு, பருத்தித்துறை

விநாயகர் — பிள்ளையார், அறிவுப்பொருள், ள. எண்களில் 3 கிரகங்களில் வியாழபகவான், மனித அவயத்தில் வலக்கண் இவைகளைக் குறிக்கும்.

ஞாபகார்த்த நிதி — திரு. சி. ஆ. சிவக்கொழுந்து
திருமதி. ஆ. சி இராசம்மா
(வ. க. கோ. சரவணமுத்துவின் மகள்)
செல்வன் ஆ. சி. மு. சுப்பிரமணியன்

நோக்கம் — அறிவு வளர்ச்சிப் பணி,
ஊனமுற்றோர் உதவிப்பணி,
கரும யோகப்பணி.

**தர்மகர்த்தா சபை**

திரு. ஆ சி. முருகுப்பிள்ளை
நிறுவனர், நிர்வாகி, ஆயுட்காலத் தலைவர்.
திரு. வ. கு. கணபதிப்பிள்ளை
B. A (Lond) சட்டத்தரணி, உபதலைவர்.
வ. ச. செல்வராசா
செயலாளர் — பொருளாளர்
திரு. க. தங்கராசா
நிர்வாகப் பொறுப்பதிகாரி

கௌரவ உறுப்பினர்கள்:

திரு. அ. துரைசிங்கம்
திரு. சு. வேதாரணியம்
திருமதி. கோ. கண்மணி

கௌரவ உப உறுப்பினர்கள்:

திரு. வி. க. கேதீஸ்வரநாதன்
திரு. ஆ. க. சிவப்பிரகாசம்

ஊ—

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 1 | 6 | ஒளிப்பின்றிச் | மறைக்காமல் |
| 1 | 14 | இகளேல் | இகழேல் |
| 8 | 4 | அனுபத்தாலும் | அனுபவத்தாலும் |
| 9 | 4 | சொல்வ | சொல்ல |
| 9 | 15 | மேட்சத்தை | மோட்சத்தை |
| 9 | 27 | போழுதில் | பொழுதில் |
| 9 | 30 | செல்லேல் | சொல்லேல் |
| 10 | 23 | நேரினிலும் | நேரினும் |
| 11 | 5 | பேசதல் | பேசுதல் |
| 12 | 11 | உளந்து | உழந்து |
| 12 | 11 | உண்டேல் | உண்டல் |
| 12 | 14 | விழையும் | விளையும் |
| 13 | 18 | பன்பு | பண்பு |
| 13 | 24 | செல்பவனுக்கு | செய்பவனுக்கு |
| 15 | 1 | சொற்கூற்ற | சொற்கூற்றம் |
| 15 | 6 | இல்லாத | பொருள் இல்லாத |

---

ஊ—

ஆசிரியர்களின் கவனத்திற்கு !

தவிர்க்க முடியாத சூழ்நிலை காரணமாக அறநெறி மணிகள் 13, 14, 15-ம் வெளியீட்டில் எழுத்துப் பிழைகள் அநேகம் ஏற்பட்டுள்ளன. எழுத்துக்கள் குற்றில்லாமை, மை பிடிக்காமை ஆகிய காரணங்களால் தவறான கருத்தைப் பிரதிபலிக்கக்கூடும். நாம் கூடுமானவரையில் பிழை திருத்தம் எழுதியுள்ளோம். எமது கவனத்துக்கு வராத பிழைகளும் இருக்கக்கூடும். இவ் அறநெறியைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் மாணவர்களின் மனதில் தவறான கருத்துக்கள் ஏற்படா வண்ணம் பிழை திருத்தங்களை உரிய இடங்களில் திருத்தி கற்பிக்குமாறு அன்புடனும் பண்புடனும் இருகரம் கூப்பி வேண்டுகிறோம்.

புலோலி மேற்கு,
15-11-1991

நிறுவனர்
விநாயகர் தரும நிதியம்